## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2007/2008
## HELD IN AUGUST – 2008

## ECS 2.11 – INTERMEDIATE MICRO ECONOMICS

**எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) மொத்தப்பயன், எல்லைப்பயன் என்னும் எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.
(06 புள்ளிகள்)

(ஆ) "குறைந்து செல்லும் எல்லைப்பயன் கோட்பாட்டில் காணப்படும் குறைபாடுகளை வரிசைசார் பயன் ஆய்வு தீர்த்து வைக்கும்" ஏற்றுக் கொள்வீரா? உமது விடையை விளக்குக.
(07 புள்ளிகள்)

(இ) எல்லைப்பயன் ஆய்வு, சமபயன் ஆய்வு என்பவற்றின் பொருளியல் பயன்பாடுகள் யாவை?
(07 புள்ளிகள்)

02. "விலை விளைவானது 'வருமான விளைவு', 'பதிலீட்டு விளைவு' என்பவற்றின் ஒரு சேர்மானமாகும்". மார்ஷல், ஹிக்ஸ், சுலஸ்கி என்போரின் அணுகுமுறையைப் பயன்படுத்தி மேற்படி கூற்றை விளக்குக.
(20 புள்ளிகள்)

03. (அ) சமயபயன் வளைகோட்டு அணுகுமுறையைப் பயன்படுத்தி ஊழியர்கள் மேலதீக நேரம் வேலைசெய்வதற்கு ஏன் நிறுவனங்கள் உயர் கூலி வீதங்களை வழங்குகின்றன என்பதை விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) ஒரு பகுத்தறிவுள்ள நுகர்வோனின் மொத்த பயன்சார்பு, வருமான வரையறை என்பன பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$$TU_{xy} = 100\,XY^2$$
$$I = P_x X + P_y Y$$

i. X , Y ஆகிய பொருள்களின் கேள்விச் சார்பினைப் பெறுக.
(06 புள்ளிகள்)

ii. நுகர்வோனின் செலவிடக் கூடிய வருமானம் 300 ரூபா ஆகவும் X பொருளின் விலை ரூபா 10 ஆகவும் Y பொருளின் விலை ரூபா 20 ஆகவும் காணப்படும் போது இந்நுகர்வோன் கொள்வனவு செய்யும் X , Y பொருட்களின் உத்தம அளவைக் காண்க.
(06 புள்ளிகள்)

04. (அ) TC , TVC , TFC , AC , MC என்பவற்றை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) உற்பத்திச் செலவுக் கோட்பாடு தொடர்பான உமது அறிவினைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| Q | TC | TVC | TFC | AVC | AFC | AC | MC |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 50 | | | | | | |
| 1 | 60 | | | | | | |
| 2 | 66 | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 69 | | | | | | | |
| 4 | 70 | | | | | | | |
| 5 | 75 | | | | | | | |
| 6 | 83 | | | | | | | |
| 7 | 92 | | | | | | | |
| 8 | 101 | | | | | | | |
| 9 | 113 | | | | | | | |
| 10 | 125 | | | | | | | |

(12 புள்ளிகள்)

05. (அ) குறுங்கால நிறைபோட்டி நிறுவனம் ஒன்றின் மொத்த வருமானம் (TR), மொத்த செலவு (TC) சார்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

$$TR = PQ$$

$$TC = 2Q^3 - 4Q^2 + 14Q + 845$$

$$P = 200/-$$

i. மொத்த நிலையான செலவு, மொத்த மாறும் செலவு சராசரிச் செலவு, எல்லைச் செலவு என்பவற்றுக்குரிய சார்புகளைப் பெறுக.

(07 புள்ளிகள்)

ii. இலாபத்தை உச்சப்படுத்தும் வெளியீட்டு மட்டம், அவ்வெளியீட்டு மட்டத்தில் மொத்த வருமானம், மொத்த இலாபம் என்பற்றைக் காண்க.

(07 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நிறுவனத்தின் நீண்டகால சராசரிச் செலவு வளையி அந்நிறுவனத்தின் அளவுத்திட்டச் சிக்கனங்களாலும், சிக்கனமிலிகளாலும் உருவாக்கப்படுகின்றது". இக்கூற்றை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

06. (அ) நிறைபோட்டி நிறுவனங்களினதும், தனியுரிமை நிறுவனங்களினதும் கேள்வி வளைகோட்டின் அமைப்பு வேறுபட்டுக் காணப்படுவதற்குரிய காரணங்கள் யாவை?

(06 புள்ளிகள்)

(ஆ) குறிப்பிட்ட ஒரு சந்தையில் தனியுரிமை நிறுவனம் ஒன்று எதிர்நோக்கும் கேள்விச் சார்பு பின்வருமாறு தரப்படுகின்றது.

$$Qd = 400 - 20P$$

நிறுவனத்தின் மொத்த செலவுச்சார்பு வருமாறு

$$C = 100 - 12Q + 0.75Q2$$

i. நிறுவனத்தின் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைப் பெறுக.

(04 புள்ளிகள்)

ii. நிறுவனம் உழைக்கும் உச்ச இலாபம் எவ்வளவு?

(04 புள்ளிகள்)

(இ) 'விலைவேறாக்கம்' என்ற பதத்தினை விளக்கி, விலை வேறாக்கத்தை மேற்கொள்ளும்போது கவனிக்கப்படவேண்டிய அடிப்படை அம்சங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

07. (அ) தனியுரிமைப் போட்டிச் சந்தையினதும் சிலர் உரிமை சந்தை அமைப்பினதும எடுகோள்களை ஒப்பிட்டு விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) விலைத் தலைமைத்துவம், சுவிஸியின் முறிவுபட்ட கேள்வி வளைகோடு என்ற மாதிரி உருக்களைப் பயன்படுத்தி சிலருரிமைச் சந்தைத் தொழிற்பாட்டை விளக்குக.

(14 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் **இரண்டிற்கு (02)** விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) நிறைபோட்டி நிறுவனத்தின் நிரம்பல் வளைகோடும், தனியுரிமை நிறுவனத்தின் நிரம்பல் வளைகோடும்.

(ஆ) குறுங்கால மொத்த உற்பத்தி வளையியும் அளவுத்திட்ட விளைவு விதியும்

(இ) சமவருமான வளையியும், சம செலவு வளையியும்

(2 x 10 = 20 புள்ளிகள்)

****